Regestered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (24-9-65) இதழ் 224

விசுவாவசு புரட்டாதி 8 ஜ: அவ் பிறை 27 வெள்ளிக்கிழமை

நீடித்த பாவனைக்கு

சொனென்ஷீன் சொனென்ஷீன்



பற்றறிகளையே உபயோகியுங்கள்

வடமாகாண ஏகவினியோகஸ்தர்கள்:-

துரை அன் கோ

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## நான்கு லட்சம் ரூபாய்!

திருக்கோணமலை, வியா.

இலங்கை மக்கள் வங்கியின் திடீர் பரிசோதனைக் குழுவினர் திருக்கோணமலை மாவட்டக் கூட்டுறவு வங்கியினதும் அதன் கந்தளாய் மூதூர்க் கிளைகளினதும் கணக்குகளைப் பரிசோதனை செய்தபோது, கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களில் சுமார் நான்கு லட்சம் ரூபா வரையில் 'வசூலிக்க முடியாத கடனுகை'க் கைவிடப்வை.

(5-ம் பக்கம் பார்க்க)

# இந்தியாவை சீன தாக்காது?

## பீகிங் செய்திகள் நிரூபிக்கின்றன

## இந்தோ - பாக். போர் முனையில் அமைதி

பீகிங், செப். 23

பாகிஸ்தானை ஆதரித்து, இந்தியாமீது தாக்குதல் நடத்துவதற்கு இனி அவசியம் இல்லையென சீன கருதுவதாக பீகிங்கிலிருந்து கிடைக்கும் ரரய்ட்டர் செய்தி கூறுகின்றன.

சீன, தற்போதைய நிலையில் தனது அவமானத்தை மறைக்குமுகமாகவே, திபேத்திலுள்ள இந்திய ராணுவ நிலைகளை இந்தியா கலைத்து விட்டதாகக் கூறுகிறது என்றும் அச்செய்திகள் மேலும் கூறின இதற்கிடையில் சீனப் பிரதமர் சூ என் லாய் நேற்று பீகிங்கில் பேசிய ஒரு வைபவத்திலிருந்து இந்தியத் தூதர் திரு. மேத்தாவும், அவரது உதவியாளர்களும் வெளியேறியதாக அறிவிக்கப்படுகிறது. இந்தியாவை ஆக்கிரமிப்பு நாடு என அவர் குறிப்பிட்டதே இதற்குக் காரணம். இந்தியத் தூதர் இத்தகைய வைபவத்திலிருந்து வெளியேறுவது இது இரண்டாவது முறையாகும்.

இதற்கிடையில் பாதுகாப்புச் சபையின் யுத்த நிறுத்த தீர்மானம் குறித்து நாளை லோகசபை விவாதம் நடத்தவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. காமன்வெல்த்திலிருந்து இந்தியா வெளியேறவேண்டும் என்ற தனிநபர் தீர்மானமொன்றை பிரஜா சோஷலிஸ்ட் கட்சி அங்கத்தினர் திரு. எஸ். என். திரிவேதி கொண்டு வந்திருக்கிறார். இத்தீர்மானமும் சபையில் விவாதிக்கப்படும்.

இன்று காலை 3-30 க்கு சண்டை நிறுத்தப்பட்டபின் இந்திய-பாகிஸ்தான் துருப்புக்கள் மோதல் எதிலும் ஈடுபடவில்லையென அறிவிக்கப்படுகிறது.

டில்லியிலும், கல்கத்தாவிலுமுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷன் அதிகாரிகளுடன் மீதான நடமாட்டக் கட்டுப்பாடு தளர்த்தப்படுமென அறிவிக்கப்பட்டது. கராச்சியிலும், டாக்காவிலுமுள்ள இந்திய ஹைகமிஷன் அதிகாரிகளின் நடமாட்ட சுதந்திரம் தளர்த்தப்பட்டிருப்பதைத் தொடர்ந்து இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஒரு சண்டையில்- பாகிஸ்தானின் மிகச்சிறந்த இரு படைப்பிரிவுகளின் பெரும் பகுதியையும், ஒரு டாங்கிப் பிரிவையும் இந்தியத் துருப்புக்கள் அழித்துவிட்டதாயும், லெப்டினண்ட் கர்னல், ஒரு மேஜர், நான்கு சீனியர், ஜூனியர் அதிகாரிகள் உட்பட 90 பேர் சிறைபிடிக்கப்பட்டு, 300 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## கிளிநொச்சிக்கு பட்டினசபை

யாழ்ப்பாணம், வெள்ளி

கிளிநொச்சியைப் பட்டினசபையாக்குவது குறித்து நேற்றுக் காலை கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இவருடன் உடுவில் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கமும் இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார்.

அண்மையில் காங்கேசன்துறையில் கரைச்சிப் பகுதியின் ஒரு பகுதியை பட்டின சபையாக்குவது குறித்து கரைச்சிக் கிராம சபைத் தலைவர் திரு. வி. ஆனந்தசங்கரி உட்பட வேறு சிலருடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது தமக்கு கிளிநொச்சியில் காணி நீர்ப்பாசன அமைச்சு குடியேற்ற திட்டப் பகுதி வீதிகளை திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் படுகிறதென்ற விபரம் தெரிவிக்கப் படவில்லையென்றும், கரைச்சிக் கிராம சபையின் கால எல்லையை நீடிப்பதாகத் தாம் கட்டளை எதுவும் பிறப்பிக்கவில்லையென்றும் மந்திரி திருச்செல்வம் இப் பேச்சுவார்த்தையின் போது சொன்னார்.

கரைச்சிக் கிராமசபையின் கால எல்லையை நீடித்திருப்பதாக பத்திரிகைகளில் வெளியான செய்தி தவறானதென்றும் மந்திரி தெரிவித்தார்.

கிளிநொச்சிப் பகுதியை பட்டினசபை அந்தஸ்துக்கு உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை தாம் விரைவில் மேற்கொள்ள விருப்பதாகவும் மந்திரி தம்மிடம் தெரிவித்ததாக கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் தெரிவித்தார்.

## ஆடிட்டர் ஜெனரல் உத்தரவு

காங்கேசன்துறை, வியா.

சென்ற ஜூலை மாதம் 22-ம் திகதியன்று காங்கேசன்துறைப் பட்டினசபை அலுவலகத்தை சபையின் சட்ட விதிகளுக்கு முரண்பட்ட முறையில் பூட்டி வைத்ததனால் அன்றைய தினம் பொது மக்களின் அலுவல்களும் சபை ஊழியர்களின் அலுவல்களும் தடைப்பட்டதாகத் தெரிவித்து சபை ஊழியரின் அன்றைய வேதனம் முழுவதையும் சபைக்குக் கொடுக்க வேண்டுமென அப்போது உபதலைவராகக் கடமையாற்றிய திரு. வி. இரத்தினராசாவுக்கு ஆடிட்டர் ஜெனரல் உத்தரவிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

இந்தோ-பாக். தலைவர்கள்

## ரஷ்யாவில் சந்திக்க வாய்ப்பு உளது

மாஸ்கோ, செப். 23

இந்திய-பாகிஸ்தான் போர்நிறுத்தக்குழு என்ற பெயரில் ஐ. நா. மேற்பார்வைக்குழு செயல்படும்.

பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானை ரஷ்யாவில் சந்தித்துப் பேச திரு. சாஸ்திரி கொள்கையளவில் இணக்கம் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இப்போது போர்நிறுத்தம் ஒப்புக்கொள்ளப்பட்டதால், இந்த இரு தலைவர்களும் சோவியத் யூனியனில் சந்திப்பது அநேகமாக நிச்சயமெனக்கூறப்படுகிறது.

## "இலங்கை ரசிகர்கள்தான் என்னை அதிகம் பாராட்டினர்கள்"

### 'ஈழநாடு' நிருபருக்கு ராஜசுலோசன பேட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

''இலங்கையிலுள்ள ரஸிகர்கள்தான் என் நடிப்பைப்பற்றிஅதிகம்பாராட்டியுள்ளார்கள். அவர்கள் தந்த பாராட்டுக்கள்தான் என்னை நடிப்புலகில் சிறந்தமுறையில் சேவை செய்வதற்கு ஏதுவாக இருந்தது. அவர்களை நான் என்றென்றும் மறக்கமுடியாது. இலங்கை ரஸிகர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டவள்.''

நேற்று பிற்பகல் தமிழ் நாட்டிலிருந்து விமான மூலம் பலாலி விமானநிலையம் வந்தடைந்த பிரபல தென்னிந்திய சினிமா நடிகை ராஜசுலோசன மேற்கண்டவாறு நமது நிருபரிடம் தெரிவித்தார்.

'குலேபகாவலி', 'நல்லவன் வாழ்வான்', 'சகோதரி', 'அரசிளங்குமாரி', 'படித்தால்மட்டும் போதுமா?' ஆகிய படங்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்த நடிகை ராஜசுலோசனவை பார்ப்பதற்காக பலாலி விமான நிலையத்தில் ஏராளமாக அவரது அபிமானிகள் கூடியிருந்தார்கள்.

மஞ்சள் சட்டையும் அதற்கேற்ற சிவப்பு சாரியும் அணிந்திருந்த நடிகை விமானத்தில் இருந்து இறங்கியதும் பருத்தித்துறை எம். பி. திரு, க. துரைரத்தினம் கைகூப்பி வரவேற்று அங்கு நின்றவர்களை அறிமுகம்செய்துவைத்தார்.

புன்முறுவல்பூத்தபடி எல்லோருக்கும் கைகூப்பி வணக்கம் தெரிவித்த திருமதி ராஜசுலோசன அங்கு நின்ற பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.

நமது நிருபர் அவரிடம் 'கலையைப் பற்றி உங்கள் கருத்தென்ன?' என்று கேட்டபோது, 'கலைதான் என் தெய்வம், அது தான் எனக்குவாழ்வு அளிக்கிறது'' என்றார்.

இலங்கை ரசிகர்களைப் பற்றித் தெரிவிக்கையில், இங்குள்ள ரசிகர்கள் தான் தன்னைப்பாரட்டிக்கடிதங்கள் எழுதுவதாகக் கூறினர்.

அங்கிருந்து அவரும் அவருடன் வந்த கோஷ்டியினரும் வல்வெட்டித்துறைக்குச் சென்றனர்.

## கூவில் சிசுக்கொலை வழக்கில் எதிரிவிடுதலை

யாழ்ப்பாணம், வெள்ளி

கூவில் சிசுக் கொலை வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ.ஸி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபின் நீதியரசர் எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்து, மந்திரியின் அறிக்கை வரும்வரை எதிரியை ரிமாண்டில் இருக்கும்படி உத்தரவிட்டார்.

எதிரி இச்செய்கையைச் செய்திருந்த போதிலும், அந்த நேரத்தில் சித்தசுவாதீனமற்றவராக இருந்த படியால் குற்றவாளியல்லவென ஜூரி சபையினர் தெரிவித்தனர்.

இவ்வழக்கில் 64-ம்ஆண்டு அக்டோபர் மாதம் 2?-ம் திகதி கூவில் என்னும் இடத்தில் வைத்திய... என்பவர், அவரது நாலரை மாதக் குழந்தை மருதமணியைக் கொலைசெய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வகேட் திரு ஏ.அமிர்தலிங்கம் புரக்டர் திரு ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிசார்பில் அரசாங்கத்தால், புரக்டர் திரு. தளையசிங்கம் யோகநாதன் நியமிக்கப்பட்டிருந்தார்.

காலஞ்சென்ற குழந்தையின் தாயும், எதிரியின் மனைவியுமான சாந்தி சாட்சியமளிக்கும்போது கூறியதாவது:—

சம்பவம் நடந்த தினத்தன்று நான் வீட்டிலிருந்தேன். காலை ஆறு மணிக்கு அடுப்படியில் வெந்நீர் வைத்துக்கொண்டிருந்தேன். எதிரி உள்ளே வந்து கத்தியை எடுத்துக்கொண்டு வீட்டிற்குள் ஓடினர். நானும் பின்னல் ஓடிச்சென்றேன். கத்தியால் குழந்தையை வெட்டினர். நான் குழந்தையை தூக்கிக்கொண்டு குளறினேன். எதிரி குழந்தையை என்னிடமிருந்து பறிக்கமுயன்றார். பின்பு எதிரியின் தகப்பனும் மாமனும் வந்து அவரைப் பிடித்து கட்டினர்கள்.

அங்கொடை மனநோய் ஆஸ்பத்திரி டாக்டர் திரு. நடராசா, டாக்டர் சண்முகநாதன் ஆகியோரும்சாட்சியமளித்தனர்.

ஜூரி சபையினரின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதாகக்கூறிய நீதியரசர், இச்சம்பவத்தையிட்டு வருத்தப்படுவதாகத்தெரிவித்தார். பூரண சுகம் கிடைக்கும் வரை மேலும் சிகிச்சை செய்வது நல்லதென்றும் நீதியரசர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பாம்பைக் கொன்று வாழ்வதைக் கூட நான் விரும்பவில்லை. அதைக் கொல்லுவதை விட, அது என்னைக் கடிக்கும்படி விட்டுவிடுவேன்.

— மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு புரட்டாதிமீ 8 வ. (24-9-65)


## ஆபத்து நீங்கவில்லை

ஐ. நா.வின் உத்தரவுக்குப் பணிந்து இந்தியாவும் பாகிஸ்தானும் யுத்தத்தை நிறுத்திக் கொண்டன. சென்ற சில தினங்களாக பாகிஸ்தான் இந்திய எல்லையிலும் பாகிஸ்தான் இந்திய மண்ணிலும் ஒலித்த துப்பாக்கி வேட்டுகள் ஓய்ந்துவிட்டன. இதேசமயம் இந்திய-சீன எல்லையில் துருப்புக்களைக் கொண்டுவந்து குவித்து இந்தியாவை மிரட்டிக் கொண்டிருந்த சீனவும் தனது மிரட்டலைக் குறைத்துள்ளது. ஆனலும் இந்திய-சீன எல்லையில் இன்னும் பெருமளவில் சீனத் துருப்புகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. யுத்தம்நிறுத்தப்பட்டுவிட்டாலும் காஷ்மீர் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வு காணப்படாவிட்டால் ஐ. நா.வை விட்டு விலகிவிடப் போவதாக பாகிஸ்தான் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்தியாவோ காஷ்மீர் பிரச்னை என்று ஒன்று இல்லை என்கிறது. இந்நிலையில் இந்திய உபகண்டத்தைச் சூழ்ந்திருந்த ஆபத்து முற்ருக நீங்கிவிட்டது என்று சொல்ல முடியாது,

காஷ்மீரினல் இந்தியாவுக்கோ பாகிஸ்தானுக்கோ கிடைக்கக்கூடிய லாபத்தைவிட காஷ்மீர் பிரச்னையினல் இரு நாடுகளுக்கும் சென்ற 17 வருடங்களாக ஏற்பட்ட நஷ்டமே அதிகம் என்று சொல்லலாம். சென்ற 16 தினங்கள் நடந்த யுத்தத்தில் இருதரப்பினருக்கும் ஏற்பட்ட ஆட்சேதமும் பொருட்சேதமும் கொஞ்சமல்ல. இந்த யுத்தத்தின் விளைவு இனி இருநாடுகளிலும் ஏற்படக் கூடிய பொருளாதாரக் கஷ்டத்தில் பிரதிபலிக்கும். இந்திய-பாகிஸ்தான் யுத்தத்தை நிறுத்துவதில் ஐ. நா. முழு வெற்றியீட்டியுள்ளதென்பது உண்மையே. ஐ. நா.வுக்கு இது புதுப் பொலிவும் புதுப்பலமும் அளிக்கலாம். என்ருலும் இரு நாடுகளுக்கிடையிலுமுள்ள பிரச்னைகளின் அடிப்படையை ஆராய்ந்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதில்தான் அதன் பணியும் வெற்றியும்தங்கியுள்ளது. இதில் வெற்றியீட்டுவதற்கு வல்லரசுகளின் ஒத்துழைப்பும் உதவியும் மிகமிக அவசியம். காஷ்மீர் பிரச்னைதான் இரு நாடுகளுக்குமிடையேயுள்ள முக்கிய பிரச்னை. இப்பிரச்னையைப்புதிதாக இருநாடுகளும் அணுகவேண்டும். மீண்டும் பழைய பல்லவியையே பாடிக் கொண்டிருந்தால் இதற்குத் தீர்வு காண்பது சுலபமல்ல. காஷ்மீரில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக இருப்பதால் அது பாகிஸ்தானுக்கே சொந்தமாகவேண்டும் என்ற பாகிஸ்தானின் கோரிக்கையை ஏற்பது நியாயமாகாது. இந்தியாவிலுள்ள இதர பல ராஜ்யங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் உள்ளன. அவற்றுக்கும் பாகிஸ்தான் உரிமை பாராட்ட முடியுமா? இதேசமயம் காஷ்மீர் பிரச்னை என்று ஒன்று இல்லை; அது தீர்ந்துபோன விஷயம் என்ற இந்தியாவின் வாதத்தையும் ஏற்க முடியாது. காஷ்மீர் ஒரு பிரச்னையாக இருக்கிறதென்பது உண்மை. இதை மறைக்க முடியாது. காஷ்மீர் பிரச்னை தீர்ந்தால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் வேறு பெரிய பிரச்னைகள் இருக்கமாட்டாது. இதை இரு நாட்டுத் தலைவர்களுமே ஒப்புக் கொண்டிருக்கிருர்கள்.

ஐ. நா.வின் சமாதானப் பணிக்கு இன்று நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. பொதுவாக ஐ. நா.வின் தலைமைக் காரியதரிசி எடுக்கும் சமாதானப்பணியை ஆதரிக்காத சோவியத் யூனியன் இந்திய-பாகிஸ்தான் தகராறில் தலைமைக் காரியதரிசிக்கு முழு ஒத்துழைப்பும், ஆதரவும் அளித்துள்ளது. இரு நாட்டுத் தலைவர்களும் சோவியத்யூனியனிலேயே சந்தித்துப் பேசலாமென்றும், அவர்கள் விரும்பினுல் தாமும் அதில்கலந்து கொள்ளத் தயாரென்றும் சோவியத்பிரதமர் மத்தியஸ்த யோசனை தெரிவித்திருக்கிருர். இதை இந்தியப் பிரதமரும், பாகிஸ்தான் அதிபரும் கொள்கையளவில் ஏற்றுள்ளனர். இதுவும் நல்ல அறிகுறி. சோவியத் பிரதமரின் மத்தியஸ்த யோசனைதான் இந்திய-சீன எல்லையில் சீனவின் மிரட்டல் ஒடுங்கியதற்குக் காரணமென்றுகூடச் சொல்லலாம். ஐ. நா.வின் சமாதானப் பணியும், சோவியத் பிரதமரின் மத்தியஸ்த யோசனையும் காஷ்மீர் பிரச்னையைப் புதிய முறையில் அணுகி, அதற்கு நிரந்தரத் தீர்வு காண உதவவேண்டும்.

இந்திய பாகிஸ்தான் யுத்தம் நிறுத்தப்பட்டுவிட்டதால் இரு நாடுகளுக்கும் தொடர்ந்து ஆயுத உதவி அளிப்பதுபற்றி அமெரிக்காவும், பிரிட்டனும் ஆலோசனை செய்யவிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இந்த ஆயுத உதவிகளின் விளைவை இந்திய-பாகிஸ்தான் யுத்தம் எடுத்துக்காட்டிவிட்டது. ஐ. நா. மகாசபை உலகசமாதானத்தை நிலைநாட்டுவதற்குச் செய்யும் முயற்சிகளில் வல்லரசுகளின் ஆயுத உற்பத்தியையும், ஆயுதங்கள் விநியோகிப்பதையும் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம். இந்திய-பாகிஸ்தான் சமாதான முயற்சி நிறைவேறும் வரையிலாவது இந்த ஆயுத உதவி வழங்கும் யோசனையை வல்லரசுகள் நிறுத்திவைப்பது நல்லது. இல்லையேல் யுத்த நிறுத்தம் மீண்டும் யுத்தத்துக்கு ஆயத்தம் செய்யும் இடைக்கால ஓய்வாகவே பயன்படும்.

காஷ்மீர் பிரச்னைக்குத் தீர்வு காணப்படாவிட்டால் ஐ. நா.விலிருந்து பாகிஸ்தான் வெளியேறிவிடுமென்ற மிரட்டல் ஐ. நா.வைப் பலவீனப்படுத்த மாட்டாதென்ருலும் சீன, இந்தோனேஷியாவுடன் பாகிஸ்தானும் சேர்ந்து உலக சமாதானத்துக்கு இடையூறு விளைவிக்கும் சந்தர்ப்பம் ஏற்படலாம். நல்ல சூழ்நிலையில் கூடியுள்ள ஐ. நா. மகாசபை உலக சமாதானத்துக்கான உறு[illegible] உலகம் எதிர்பார்க்கிறது.

## "தமிழ் மக்கள் குறைகளை தீர்க்க மந்திரி சபையில் சேர்ந்தேன்"

### வன்னியசிங்கம் நினைவு விழாவில் மந்திரி திருச்செல்வம் பேச்சு

கோண்டாவில், வியா.

தமிழ் மக்களின் குறைகளை நிவிர்த்திசெய்யும் நோக்கத்தோடுதான் மந்திரி சபையில் சேர்ந்தேன் என்று கொக்குவில் கிழக்கு மாத்தனுர் கோவிலுக்கருகாமையில் நிகழ்ந்த வன்னியசிங்கம் நினைவுவிழாக் கூட்டத்தில், ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் பேசும்போது கூறினர்.

மந்திரி திரு. திருச்செல்வம் மேலும் கூறியதாவது:

எமது இழந்த உரிமைகளையும், கோரிக்கைகளையும் பெறுவோம் என்ற நம்பிக்கையுடனிருக்கிருேம். எங்கள் இனத்திலுள்ள மற்ருெரு முக்கிய பிரச்னை சாதிப் பிரச்னை. ஒரு சுதந்திரநாட்டில், ஒரு மனிதனுக்குள்ள சுதந்திரம், எல்லா மனிதருக்கும் உண்டு. கட்டுப்பாடுகளை நீக்கி ஒன்றே குலம் என்ற தத்துவத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் பேசும்போது கூறியதாவது:-

இலங்கை பாராளுமன்றத்தில் தமிழனின் குரல் முதன்முதல் ஒலிப்பதற்கு காரணமாயிருந்தவர்கள் காலஞ்சென்ற வன்னியசிங்கமும் இராஜவரோதயமும் தான். அவர்கள் செய்த நற்பணியினல், நாம் இன்று தன்மானத்துடனும், சுயமரியாதையுடனும் வாழ்கின்ருேம்.

அரசியலில் தலையிடுவது கூடாது என்ற அபிப்பிராயம் தவருனது. சுதந்திரம் அடைந்தபின், உரிமைகளும் சலுகைகளும் பறிக்கப்படும் போது. அரசியலில் தலையிடாமல் இருக்க முடியுமா? வன்னியசிங்கம் தோன்றியிராவிட்டால்நாம் இன்று சிங்களவர்களாகியிருப்போம்.

தமிழ் மக்களுக்கு அரசியல் விழிப்பு வேண்டும். இன்றைய சூழ்நிலையில், தமிழ் இனம் நன்ருக வாழவேண்டுமானல் நமக்கென்று ஓர் ஆட்சி வேண்டும். எங்களை நாம் ஆள வேண்டும்.

வட்டுக்கோட்டை எம்.பி. திரு. ஏ. அமிர்தலிங்கம், மஷூர் மௌலானு, டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன் ஆகியோரும் பேசினர்.

யாழ்ப்பாணம்

## கலாக்ஷேத்திரத்தின் நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் கலாக்ஷேத்திரத்தின் ஐந்தாவதுநிறைவு விழாவும், நவராத்திரி விழாவும் வருகிற சனி, ஞாயிறு, திங்கட் கிழமைகளில் வண்ணைபிள்ளையார் கோவில் கலாக்ஷேத்திர நடன அரங்கில் நடைபெற விருக்கிறது.

மூன்று நாள்வரை நடைபெறவிருக்கும் இவ்விழாக்களில் சொற்பொழிவுகள், கதம்ப நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெறும்.

சனிக்கிழமை நிகழ்ச்சிகள் யாழ்ப்பாண மாவட்ட சுகாதார அதிகாரி டாக்டர் எஸ். சிவஞானம் தலைமையில் நடைபெறும். திரு. கெ. துரைராசா, செல்வி இந்திராதேவி கணபதிப்பிள்ளை, திருமதி மோகனம்பிகை கணேசன் ஆகியோரின் பாட்டுக் கச்சேரியும், யாழ். கலாக்ஷேத்திர மாணவிகளின் பரதநாட்டியமும், மற்றும் நாதஸ்வரக் கச்சேரி ஆகிய பல்வேறு நிகழ்ச்சிகள் நாளை இடம்பெறும். இதனையடுத்து சொற்பொழிவுகளும் நடைபெறும்.

ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிகள் வடபகுதி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் தலைமையிலும், திங்கட்கிழமை நிகழ்ச்சிகள் வடபகுதி அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா தலைமையிலும்நடைபெறும்.

## சமயப் பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று வெள்ளிக்கிழமை மாலை 7 மணி முதல் 8மணி வரை அகில இலங்கைப் பொதுஜன சேவைச்சங்க சமயப்பிரசார சபையினரால் நல்லூர் கிழக்கு மூத்த விநாயகர் ஆலயத்தில் பண்டிதர் திரு. இரா. சிவசுப்பிரமணியம் பெரியபுராணத் தொடர்ச்சிப் பிரசங்கமும் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் திரு. த. சுப்பிரமணியம் ''கண்ணப்பநாயனுர்'' என்னும் பொருள் பற்றியும் கதாப் பிரசங்கம் நிகழ்த்துவார். மாலை 6 மணி முதல் 7 மணிவரை வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் தேவஸ்தான வித்வான் திரு. த. சுப்பிரமணியம் ''மார்க்கண்டேயர்'' என்னும் பொருள்பற்றிக் சங்கீத கதாப்பிரசங்கமும் 7 மணி முதல் சுக்கிரவார உற்சவமும் நடைபெறும்.

## பிரதமர் பெருமகிழ்ச்சி

பம்பலப்பிட்டி, வியா.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையேயான சண்டை நிறுத்தம் பற்றி தாம் மகிழ்ச்சி கொண்டுள்ளதாக பிரதமர் திரு. டட்லி சேனநாயகா தெரிவித்துள்ளார்.

ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்தனவும், தாம் யுத்த நிறுத்தம் குறித்து பெருமகிழ்ச்சி கொண்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

## வெற்றிலைவாழைப்பழம் ஏற்றுமதியாகும்

பம்பலப்பிட்டி, வியா.

இலங்கையிலிருந்து வெற்றிலை, வாழைப்பழம், நண்டு ஆகியன விரைவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட விருக்கிறது.

மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது வெற்றிலைக்கு நல்ல கிராக்கி இருப்பதாக அறியப்படுகிறது.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## நெடுந்தீவு பஸ்சேவை

நெடுந்தீவில் அண்மையில் ஆரம்பித்துவைத்த பஸ் சேவையின் நேரசூசியில் சில பொருத்தமற்றதாக இருப்பதால் அவை பொதுமக்களுக்கு பொருந்தக் கூடியதாக அமைத்தால் மிகவும் நன்ருகும். மேற்கே இருந்து மாலை 1-15 க்குப் புறப்படும் பஸ் துறைமுகத்துக்கு 1-30 க்கு வந்தடைகிறது. ஆனல் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் மோட்டார் வள்ளம், 1-15க்கு புறப்பட்டு விடும். எனவே பஸ் வண்டி மேற்கே இருந்து 12-45 க்குப் புறப்படுமேயானல் பிற ஊருக்கு பிரயாணம்செய்யும் பிரயாணிகளுக்கு மிகவும் வசதியாக இருக்கும்.

பிரயாணி.

நெடுந்தீவு.

## எமக்கும் பிரதிநிதித்துவம்

சிறுபான்மைத் தமிழர் சமூகத்தில் இன்று டாக்டர்கள், அட்வகேட், புறக்டர் மற்றும் பட்டதாரிகள் படித்த அறிவாளிகள் பலர் உள்ளனர். இவர்கள் வாழ்வில் உயர்வு பெறுவதற்கு, உயர்தர பதவிகளில் அமர்த்த தமிழ் எம். பிக்கள் உதவிபுரிய வேண்டும் இவ்விதம் செய்வதன் மூலம் சாதிப் பாகுபாடு ஓரளவு நீங்கிவிடும்.

சாதிப் பாகுபாட்டை நீக்குவதற்கு மகாநாடுகள் கூட்டுவதுடனில்லாது இந்தியாவில் சாதிப்பாகுபாட்டு ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டதுபோல் இலங்கைப் பார்லிமெண்டிலும் சட்டம் நிறைவேற்றி அதை அமுல் நடத்த வேண்டும்.

ஜனப்பிரதிநிதிகள் சபையிலோ, செனட்சபையிலோ சிறுபான்மைத் தமிழர் சமூகப் பிரதிநிதி ஒருவரை நியமிக்க தமிழ் எம். பிக்கள் முன்வர வேண்டும். அவர்கள் முன்வராவிடினும் பிரதமர் இவ்விஷயத்தில் கவனம்செலுத்தி சிறுபான்மைத் தமிழர் சமூகத்துக்கும் பார்லிமென்டில் பிரதிநிதித்துவம் கிடைக்கச் செய்யவேண்டும். எமது குறைகளை மந்திரிமாருக்கும், அரசாங்கத்துக்கும் எடுத்துக்காட்டி நிவாரணம் தேடிக்கொள்வதற்கு பார்லிமெண்டில் எமது சமூகத்தின் பிரதிநிதி ஒருவராவது இருக்கவேண்டும். இன்றுள்ள நிலையில் தேர்தலில் போட்டியிட்டு நமது சமூகத்தவர் வெற்றியீட்டுவது சுலபமல்ல. எனவே ஜனப்பிரதிநிதிகள் சபையிலும் செனட் சபையிலும் எமது சமூகத்துக்குப் பிரதிநிதித்துவமளிக்க பிரதமர் முன்வரவேண்டும்.

ஏ. கே. செல்லையா.

யாழ்வீதி,
யாழ்ப்பாணம்.

## 100, 000 மார்க் உதவி

பெர்லின், செப். 23

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் தொழிற்சங்க சம்மேளனம் வியட்னமில் அமெரிக்கன் ஆக்கிரமிப்புக்கு ஆளான மக்களுக்கு உதவிசெய்வதற்காக மேலும் 100, 000 மார்க் நன்கொடை வழங்கியுள்ளது. இதுவரை இச்சம்மேளனம் வியட்நாமுக்கு வழங்கிய நன்கொடை 10 லட்சம் மார்க்காகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாஸ்திரி, அயூபுக்கு உலகெங்கும் பாராட்டு; ஐ. நா. வட்டாரங்கள் பெருமகிழ்ச்சி

## யுத்த நிறுத்தத்துக்கு சீன எதிர்ப்பு:
## பாகிஸ்தான் நெருக்கப்பட்டதாக பீகிங் அறிவிப்பு
### ஆனல் இந்தியாவுடன் தங்கள் பிரச்னை இன்னும் இருக்கிறது என சீன கூறுகிறது

புதுடில்லி, செப். 23

இந்திய-பாகிஸ்தான் யுத்தநிறுத்தத்தை, சீனவைத்தவிர உலகமெல்லாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது.

ஜனதிபதி ஜோன்ஸன் இரு நாட்டுத் தலைவர்களுக்கும் பாராட்டு தெரிவித்திருக்கிருர்.

சோவியத் அதிபர் மிக்கோயன், பிரதமர் கோஸிஜின், பாதுகாப்பு மந்திரி மலினேவ்ஸ்கி ஆகியோர் இதேபோல் பாராட்டுக் கூறி, ''இந்தியாவின் நிலை ஆக்கபூர்வமானது எனத் தெரிவித்திருக்கிருர்கள்.

லண்டனில் காமன்வெல்த் உறவு இலாகா மூலம் பிரிட்டிஷ் அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை வரவேற்றிருக்கிறது.

யுத்த நிறுத்தத்தில் இந்திய, பாகிஸ்தான் தலைவர்கள் காட்டிய ராஜதந்திரத்தையும், ஐ. நா. வகித்த பங்கையும் பிரஞ்சுத் தலைவர்கள் பாராட்டியிருக்கிருர்கள்.

இலங்கை, மலேஸியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இரு நாடுகளுக்கும் பாராட்டு தெரிவித்திருக்கின்றன.

ஐ.நா. பொதுச்சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் இத்தாலிய வெளிநாட்டு மந்திரி செனேரபன்பானி, இந்தோ-பாகிஸ்தான் யுத்தத்தை ஐ.நா. வெற்றிகரமாக முடித்துவைத்திருக்கும் இந்த நல்ல சுபவேளையில் 20-வது பொதுச்சபை மகிழ்ச்சியுடன் தனது அலுவல்களை ஆரம்பித்திருப்பதாகக் கூறியிருக்கிருர்.

எனினும் நவசீன செய்தி ஸ்தானம் பின்வருமாறு கூறுகிறது.

''உலகத்தையே ஆட்டிப் படைக்கவிரும்பும் அமெரிக்காவும், ரஷ்யாவும் ஒன்று சேர்ந்து பாகிஸ்தானை நெருக்கச் சதிசெய்கிருக்கின்றன.

ஆனல் இந்தியாவுடனன எங்கள் பிரச்னை முடியவில்லை. இன்றும்அது இருக்கிறது. சீனப்பிரதேசத்தில் கணிசமான பகுதியை இந்தியா ஆக்கிரமித்திருக்கிறது. கடத்திச்செல்லப்பட்ட சீனர்களையும், எருமை மாடுகளையும் ஒன்று குறையாமல் இந்தியா திருப்பித் தந்தாக வேண்டும்.''

ஐ.நா. ஸ்தாபனம் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்றும், இன்றேல் புரட்சி ஐ.நா. ஸ்தாபனம் ஒன்று அமைக்கப்படவேண்டுமென்றும் சீன மேலும் கூறியது.

## உலகம் சுற்றும் மேனன்

பம்பாய், செப். 23

உலகஞ் சுற்றும் கிருஷ்ணமேனன், நீண்ட கால உள்நாட்டு ஓய்வுக்குப்பின் நேற்று கெய்ரோவுக்குப் புறப்பட்டுச் சென்றுர். இந்திய மந்திரி சபையிலிருந்து விலகியபின் அவர் வெளிநாடு செல்வது இது இரண்டாவது தடவையாகும். இதற்கு முன்பும் அவர் கெய்ரோவுக்குத்தான் சென்றிருந்தார். முக்கிய திரைமறைவு ராஜீய வேலைகளுக்காக அவர் சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது. சூயஸ் நெருக்கடியின்போது ஜனதிபதி நாஸரின் அழைப்புக்கிணங்க திரு. மேனன் 29 முறை கெய்ரோவுக்குச் சென்றுர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யுத்தத்தின் பலன்

லண்டன், செப். 23

இந்தோ-பாகிஸ்தான் யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து இரு பகுதிகளுக்கும் ஏற்பட்ட சேதம்பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. இரு நாடுகளும் கொடுத்துள்ள புள்ளிவிபரங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### இந்தியாவின் கணக்கு

| | |
|---|---|
| கொல்லப்பட்ட பாகிஸ்தானியர் | 3840 |
| பிடிபட்டவர்கள் | 449 |
| அழிக்கப்பட்ட, பிடிபட்ட டாங்கிகள் | 464 |
| அழிக்கப்பட்ட விமானங்கள் | 70 |
| கொல்லப்பட்ட இந்தியர் | 1157 |
| அழிக்கப்பட்ட டாங்கிகள் | 100 |
| இழந்த விமானங்கள் | 35 |

### பாகிஸ்தான் கணக்கு

| | |
|---|---|
| கொல்லப்பட்ட இந்தியர் | 7000 |
| பிடிபட்டவர்கள் | 827 |
| அழிக்கப்பட்ட, பிடிபட்ட டாங்கிகள் | 534 |
| அழிக்கப்பட்ட விமானங்கள் | 128 |

(1) தனது சேதம்பற்றி பாக். அறிவிப்பில் இல்லை.

(2) கொல்லப்பட்ட சிவிலியன்களின் எண்ணிக்கை இதில் சேர்க்கப்படவில்லை,

## "பாகிஸ்தான் காப்பாற்றப்பட்டது: கடவுளுக்கு நன்றி"
### ஆனல் போராட்டத்துக்கு தயாராகுமாறு அயூப் வேண்டுகோள்

ராவல்பிண்டி, செப். 23

"பாகிஸ்தான் காப்பாற்றப்பட்டது. கடவுளுக்கு நன்றி தெரிவிக்கிறேம்" என ஜனதிபதி அயூப்கான் விடுத்த செய்தியில் கூறினர்.

இந்தியத் துருப்புகள் சுட்டாலொழிய தாங்கள் சுடவேண்டாமென பாகிஸ்தான் படைகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாய் ஜனதிபதி அயூப்கான் அறிவித்தார்.

யுத்தத்திலீடுபட்ட தனது படைவீரர்களுக்கு அவர் பாராட்டுத் தெரிவிக்கையில் பாகிஸ்தான் வீரர்களின் சாதனை இஸ்லாமிய சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய விஷயமெனக் குறிப்பிட்டார்.

இந்தியாவின் ராணுவ பலம் சிதைக்கப்பட்டுவிட்டதாயும், பலம்பொருந்திய 'எதிரி' யுடன் பாகிஸ்தான் வீரர்கள் தீரத்துடன் போராடியதாயும் அவர் கூறினர்.

போராட்டம் இன்னும் ஓய்ந்துவிடவில்லை. விழிப்பாகவும், தயாராகவும் இருங்கள். நமது லட்சியம் சமீபித்துவிட்டது என்றும் பாகிஸ்தான் அதிபர் படைவீரர்களையும், தனது மக்களையும் கேட்டுக்கொண்டார்.

### பூட்டோ

நியுயோர்க்கில் இருக்கும் வெளிநாட்டு மந்திரி பூட்டோ நேற்று பாதுகாப்புச்சபையில் பேசியபோது பாகிஸ்தான் ஐ. நா.விலிருந்து வெளியேறினல் உலகில் மூன்றிலொரு பகுதி மக்களுக்கு அதில் பிரதிநிதித்துவம் இருக்காது என்றுர். திரு. பூட்டோவின் பேச்சு மிகச் சிறந்த சொற்பொழிவுகளில் ஒன்றென ஐ. நா. வட்டாரங்கள் கூறின.

யுத்த நிறுத்தம், காஷ்மீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையே என பாகிஸ்தான் வட்டாரங்கள் கூறின.

### 500 சதுரமைல் பாக். வசம்

இதற்கிடையில் நேற்றைய சண்டையில் ராஜஸ்தானில் 6 இந்திய காவல் நிலைகளைப் பிடித்துவிட்டதாயும், தங்கள்வசம் 500 சதுரமைல் பிரதேசம் இருப்பதாயும் பாகிஸ்தான் அறிவித்தது.

## கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய மண்டலாபிஷேக 15-ம் நாளான இன்று மாலை 6-30 மணிக்கு ஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதர் 'மாமனுய் வந்து வழக்குரைத்தல்' என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

## யுத்தநிறுத்த எல்லைக்கு ஐ. நா. பார்வையாளர்

நியூயோர்க், செப். 23

ஆஸ்திரேலியா, கனடா, இத்தாலி ஆகிய நாடுகள் இந்தோ-பாக்யுத்தநிறுத்த மேற்பார்வையாளர் குழுவில் இடம்பெறவிருக்கின்றன, 3 ஸ்காண்டினேவிய நாடுகளும் இதில் இடம் பெறும். இந்தியாவுக்கும் மேற்கு பாகிஸ்தானுக்குமிடையேயான 1600 கிலோமீட்டர் நீள எல்லையில் 100 ராணுவ பார்வையாளர்களும், 60 சிவிலியன்களும், மற்றும்பலரும்கடமையாற்றுவார்கள்.

தற்போது பாலஸ்தீனிலுள்ள ஐ. நா. பார்வையாளர்கள் காஷ்மீருக்குப் புறப்பட்டிருக்கிருர்கள். ஐ. நா. எல்லைகளுக்கு 8 விமானங்கள் ஒதுக்கப்படும்.

யுதாண்ட் இப்போது இவை சம்பந்தமான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருக்கிருர்.

## ஐ. நா.வில் திபேத் பிரச்னை

நியூயோர்க், செப். 23

தற்போதைய ஐ. நா. மகாசபைக் கூட்டத்தில் திபேத் பிரச்னையை பிலிப்பைன்ஸ் கொண்டுவரும் என அறிவிக்கப்படுகிறது.

சீனவின் அங்கத்துவ பிரச்னையும் தற்போதைய கூட்டத்தில் இடம் பெறும்.

## அமெரிக்கர் அழித்தனர்

சைகோன், செப். 23

தென்வியட்னுமில் வியட்காங்கியரின் ஆயுதத் தொழிற்சாலை ஒன்றை [illegible] ரிக்கர்கள் கைப்பற்றி அதை அழித்தனர்.

## இரு துருப்புகளும் தற்போதைய நிலையில் தொடர்ந்திருப்பர்
### அயூப்கான் மீண்டும் மிரட்டல்

புதுடில்லி, செப். 23

இந்தியா, பாகிஸ்தான் நாடுகள், போர்நிறுத்தம் செய்திருக்கும் அதேசமயம், இரு பகுதித் துருப்புக்களும் இப்போது உள்ள நிலையிலேயே தற்காலிகமாக இருக்குமென அறிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் படைகள் தற்போதைய நிலையிலேயே இருக்கும் என்றும், விரைவில் காஷ்மீர் பிரச்னைக்குத் தீர்வுகாணுவிடில் உபகண்டத்தில் இதுவரை காணுத பெரும் போர் ஒன்று மீண்டும் ஏற்படுமென்றும் ஜனதிபதி அயூபகான் அறிவித்தார்.

இப்போதுள்ள நிலையிலேயே போர்நிறுத்தம் இருக்குமென்றும், ஆயுதம் தரித்த பாகிஸ்தானிகள் திரும்ப அழைக்கப்பட்டு, மீண்டும் இவ்வித ஊடுருவல் நிகழாதென உத்தரவாதம் கிடைக்கும்வரை இந்தியத் துருப்புக்கள் இருக்குமென்றும் கல்வி மந்திரி சக்ளா அறிவித்திருக்கிருர்.

### சாஸ்திரி பாராட்டு

இந்தியாவுக்கு ஏற்பட்ட மகத்தான சோதனையை ஹிந்துக்களும், முஸ்லிம்களும், சீக்கியர்களும், கிறிஸ்தவர்களும், பார்ஸிகளும், மற்றவர்களும் ஒன்ருக இணைந்து சமாளித்ததை பிரதமர் சாஸ்திரி பாராட்டியிருக்கிருர். முப்படைகளுக்கும் அவர் நன்றியும், பாராட்டும் தெரிவித்தார்.

### மீண்டும் ஏற்பட்டால் . . .

நேற்று அமிர்தசரஸில் சிவிலியன்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தியது குறித்து ஐ. நா.விலுள்ள இந்தியப் பிரதிநிதி யுதாண்டுக்கு சமர்ப்பித்த புகாரில், இது யுத்த நிறுத்த உணர்ச்சிக்குப் பாதகமானது எனக்குறிப்பிட்டிருக்கிருர். மீண்டும் இவ்வாறு நடந்தால் எதிர் விளைவுகளுக்கு பாகிஸ்தானே பொறுப்பு என அவர் கூறியிருக்கிருர்.

நேற்றிரவு அம்பாலா, ஜல்லந்தர், லூதியான ஆகிய நகரங்களில் விமான எச்சரிக்கைச் சங்குகள் முழங்கின.

நேற்று பாரத விமானப் படை அதிகாரிகள் சிலருக்கு வீரவிருதுகள் வழங்கப்பட்டன.

சண்டையில் கொல்லப்பட்ட, முக்கால்வாசி ஊனமுற்ற ஆயுதப் பொலிசாரின் குடும்பங்களுக்கு படைவீரர்கள் போன்ற சலுகைகளை வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

### அஸ்ஸாமில் ஊடுருவல்

இதற்கிடையில் அஸ்ஸாம்—கிழக்கு பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தானியர் ஊடுருவல் செய்ததாயும், இவர்களில் பெரும் பாலானேர் பிடிக்கப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது. வேவு பார்க்கவும், நாசவேலை செய்யவுமே இவர்கள் அனுப்பப்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்தோனேஷியாவிலுள்ள பாரத தகவல் அதிகாரியை இந்தியா வாபஸ் பெற்றிருக்கிறது.

### இந்தியப்படைகள்

இந்தியப் படைகள் இப்போது சேஹ்ரு நகரத்திலிருந்து 30 மைல் தூரத்திலும், சியால் கோட்டிலிருந்து 16 மைல் தூரத்திலும், லாடரிலிருந்து 8 மைல் தூரத்திலும் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

அதே சமயம், மறு அறிவித்தல்வரை சிவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்ந்து இருக்குமென அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சருக்கு வரவேற்பு

வல்வெட்டித்துறை, வியா

செம்பியன்பற்று கிராம சபை அலுவலக வளவில் அமைக்கப்பட்ட ''விடிவெள்ளி அரங்கில்'' உள்ளூராட்சி அமைச்சர் திரு, மு. திருச்செல்த்த்துக்கு கிராம சபைத் தலைவர் திரு. ஐ. ஆ. ஐயம்பிள்ளை தலைமையில் வரவேற்புஅளிக்கப்பட்டது.

திரு திருச்செல்வம் நன்றி தெரிவித்துப் பேசுகையில்: இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலை தமிழ் பேசும் மக்களுக்கு சாதகமாகவே இருந்துவருகிறது. தமிழ் பேசும் மக்கள் தங்கள் இழந்த உரிமைகளைப் பெறுவதற்காக தேசிய அரசாங்கத்தை அமைத்துள்ளார்கள். மொழிப் பிரச்னை தீர்ந்ததும் மாவட்ட சபைகள் மூலம் தமிழ் பிரதேசங்களை வளம்பெறச் செய்வோம். பிற்போக்கான இப்பகுதிக்கிராமங்களுக்கு ஸ்தல ஸ்தாபன மந்திரி என்ற கோதாவில் உதவி அளிப்பதற்கு ஆயத்தமாகவிருக்கிறேன். இப்பகுதி மக்கள் மீன்பிடித்தொழிலில் போதிய கவனத்தைச் செலுத்தி தங்கள் வாழ்வை செவ்வனவே நடாத்த முயலவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

கிராம சபை, அமைச்சரிடம் மகஜர் ஒன்றை சமர்ப்பித்தது.

## கதம்பவிழா

அளவெட்டி, வியா

அளவெட்டி மகாஜன சபை கிராமமுன்னேற்ற சங்கத்தினர் அளவெட்டி மகாஜனமண்டபத்தில் ஒரு கதம்பவிழாவை இம்மாதம் சனிக்கிழமை நடாத்தவிருக்கின்றனர்.

இவ் விழாவில் மாணவ மூத்தமிழ்மன்றத்தாரின் சமூக நாடகமும், திரு. எஸ். இராசரத்தினத்தின் 'சக்கடத்தார்' நாடகமும் இடம்பெறும்.

## சமாஜ ஆதரவில் நெசவு நிலையம்

பருத்தித்துறை, வியா

புலோலி பலநோக்குக்கூட்டுறவுச் சங்க சமாஜம் கைத்தறி நெசவுசாலையொன்றை விரைவில் சமாஜ எல்லைக்குள் நிறுவஇருக்கின்றது

விதைத்தறி நிலையம் ஒன்றை நிறுவுவதாகஇருந்த இச்சமாஜம் அதற்கு காலதாமதமாகும் என அறிந்தமையால் உடனடியாக கைத்தறி நெசவாலையை நிறுவுவதென முடிவுசெய்ததுடன் ரூபா 10 ஆயிரத்தை அதற்காக ஒதுக்கியும் உள்ளது.

ஆலை அமைப்பதற்கான இடம் தெரிவு செய்வதில் நிர்வாகஸ்தர்கள் கவனம் செலுத்திவருகின்றனர்.

## என்ஜினியர்கள் பற்றுக்குறையைப் போக்க பிரிட்டிஷ் பேராசிரியர் கருத்து

பம்பலப்பிட்டி, வியா

தொழில் நுட்பப் பாடசாலைகளை அதிகரிப்பதாலும் பிரிட்டனுக்கும் இலங்கைக்கும் என்ஜினியர்களுக்கு பயிற்சி அளிக்கும்துறையில் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்துவதாலும் இலங்கையில் என்ஜினியர்கள் பற்றுக்குறையைப் போக்க வழி வகுக்கலாமெனில் இலங்கை வந்துள்ள கேம்ரிஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பிரபல பேராசிரியர் ஜே. எப். கொசுலஸ் நேற்று பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் உற்பத்தி துறையில் நவீன முறைகளைக் கையாளவேண்டுமென்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

REGAL--JAFFNA
NOW SHOWING!
The Beatles
IN
A HARD
DAY'S NIGHT

## 2வது சைவ மகாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

கைதடி இந்துவாலிபர் சங்கங்களின் 2வது சைவ மகாநாடு இன்று தொடக்கம் திங்கட்கிழமை வரை கைதடி-நாவற்குளி- மறவன்புலோ மக்களின் ஆதரவில் நடைபெறவிருக்கிறது. சைவமகாநாட்டு மலரை சைவபூஷணம் நம. சிவப்பிரகாசம் வெளியிட்டுவைப்பார்.

### இன்றைய நிகழ்ச்சிகள்

பி. ப. 5-00: திருமுறை ஏட்டுச்சுவடி ஊர்வலம், இடம்: கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாசாலை தாயுமானவர்அரங்கு, தலைவர்: திரு. இ. கந்தையா, கடவுள் வாழ்த்து: கைதடி சங்கீத வகுப்பு மாணவிகள், கொடியேற்றல்: திரு. க. கங்காதரன், தலைமையுரை: தலைவர், விரிவுரையாளர்கள்: பண்டிதை திருவாட்டி சத்தியதேவி துரைசிங்கம், வித்துவான் பொன். கந்தசாமி, பண்டிதர் இ. இராமலிங்கம், பண்டிதர் துரைசிங்கம், சைவப் புலவர் சித்தாந்த பண்டிதர் இ. செல்லத்துரை, கதாப் பிரசங்கம்: செல்வி ராதா சோமசுந்தரம், மலர் வெளியீடு: சைவபூஷணம் நம. சிவப்பிரகாசம், ஐயந்தெளிதல் நிகழ்ச்சி தலைவர்: அ. சரவணமுத்து, கருத்துரையாளர்: பண்டிதர் க. நமசிவாயம், பரிசில் வழங்கல் திரு. வ. நவரத்தினம்.

உணவு

## உற்பத்திச் சபையின் பொதுக் கூட்டம்

பருத்தித்துறை, வியா.

வடமராட்சிப்பகுதி உணவு உற்பத்திச்சபையின் பொதுக்கூட்டம் காரியாதிகாரி அலுவலகத்தில் நடைபெற்று, பருத்திருதுறையில் சந்தைப் பகுதியினரின் விற்பனை நிலையமொன்றைப் பருத்தித்துறையிலும் உற்பத்திப் பொருட்களை வாங்கும் நிலையமொன்றை நெல்லியடியிலும் ஸ்தாபிக்கக் கோருவதென முடிவு செய்யப்பட்டது.

காரியாதிகாரி திரு ஏ. சி. விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற ஷெ கூட்டத்தில் வடமராட்சிப்பகுதியில் விவசாயப் போட்டியொன்றைநடத்திக் கிழங்கு, நிலக்கடலை முதலானவற்றின் உற்பத்தியளவை அதிகரிக்கச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்குப் பகுதி விவசாயிகட்கு இலவசமாக விதைநெல் வழங்க வேண்டுமெனக் கோருவதெனவும் வல்லிபுரம்-குடாரப்பு; கட்டைவேலி-அந்தணன்திடல், கட்டைவேலி-வல்லை ஆகிய ரஸ்தாக்களில் நிழல் மரங்களை நாட்ட மரக்கன்றுகளையும் பிற உதவிகளையும் கோருவதெனவும்முடிவு செய்யப்பட்டது.

## சிவானந்தரின் புனித சின்னங்கள்

### இலங்கைக்கு வரவிருக்கிறது

பம்பலப்பிட்டி, வியாழன்

இமய ஜோதி ஸ்ரீ சிவானந்த மஹரிஷிகளுடைய புனித சின்னங்களாகிய திருவடிகள், புனித வஸ்திரம், சுவாமிஜியின் புனித உருவச்சிலை, கங்கதீர்த்தம் ஆகியவற்றைரிஷிகேசத்திலிருந்து மட்டக்களப்பு தெய்வநெறிக்கழகத் தலைவராகிய ஸ்ரீ சுவாமி ஓம் காரானந்தா அடுத்தமாதம்முற்பகுதியில் இலங்கைக்கு கொண்டுவரவிருக்கிறார் இப்புனித சின்னங்கள் இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள திவ்ய [illegible] வரவேற்கப்பட்டு அன்பர்களின் தரிசனத்துக்கு வைக்கப்படும்.

# சீனர்கள் வாபஸாகும் அறிகுறி இல்லை

## எல்லைப்பகுதியில் சுவர் அமைக்கிறார்கள்

கேங்டாக், செப். 23

சிக்கிம் எல்லையிலிருந்து சீனத் துருப்புக்கள் வாபஸாகும் அறிகுறி எதுவும் காணப்படவில்லை என இங்கிருந்து கிடைத்த கடைசிச் செய்திகள் கூறுகின்றன.

மோதல்கள்எதுவும் நடைபெறவில்லை என்றும், இருபகுதித் துருப்புக்களும் எல்லையில் ரோந்து சுற்றி வருவதாயும் அறிவிக்கப்படுகிறது.

சிக்கிம் எல்லையிலுள்ள ஜெல்லட்லா பகுதியில் சீனர்கள் உயரமான மதில் ஒன்றை எழுப்பிவருகிறார்கள்.

இதற்காக பெரிய கற்களையும், சிமெந்து மூடைகளையும் அவர்கள் கொண்டு வந்து குவிக்கிறார்கள்.

கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகலில் 60 சீனர்கள் பாரதப்பகுதிக்குள் சென்று வேவு பார்த்தனர் என்றும், இப்போது பல எல்லைப்பகுதிகளிலும் சீனத் துருப்புக்கள் தங்களைத் வலுப்படுத்தி வருவதாயும் அறிவிக்கப்படுகிறது.

கதிர்காமத்தில்

## படுமோசமான சுகாதார நிலைமை!

— நமது கதிர்காம நிருபர் —

கதிர்காமம், வியாழன்

கதிர்காம ஆலயப் பகுதியின் சுகாதார நிலைமை படுமோசமான முறையில் காட்சியளிக்கின்றது. இதனால் நாட்டின் நாலா பக்கங்களில் இருந்து வரும் அடியார்கள் மனதிலும், கதிர்காமம்வாழ் மக்களின் மனதிலும் . இச்சீர்கேடான நிலைமையையிட்டு பெரும் அதிருப்தி நிலவுகின்றது. இங்குள்ள சுகாதார பரிசோதகருக்கு வேண்டிய வேலையாட்களும், உபகரணங்களும் இல்லாமையும் போக்குவரத்து வசதிக்கு வாகனம் வழங்காமையுமே இந்நிலைக்கு முக்கிய காரணம் எனத் தெரிகிறது.

கதிர்காமத்தின் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் சென்ற ஜூன் மாதம் உள்நாட்டு அமைச்சர் திரு. தஹநாயக்கா தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தற்சமயம் வேலைசெய்யும் சிப்பந்திகளுடன் மேலதிகமாக ஒரு சுகாதார மேற்பார்வையாளர் இரண்டு சுகாதார காவற்காரர், மருந்து தெளிப்பதற்கு ஒரு கூலியாள், பொது மலகூடங்கள்சுத்தி செய்வதற்கு மூன்று கூலியாட்கள், அத்தோடு குப்பை கூளங்கள் சுமந்து செல்வதற்கு ஒரு ஒற்றை மாட்டு வண்டியும் கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இதுவரையில்

(5-ம் பக்கம் பார்க்க)

## மாணவர் இரத்ததானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் நடமாடும் இரத்த சேகரிப்பு வங்கி இயக்கத்தினர் யாழ்ப்பாணம் சென். பட்றிக்ஸ் கல்லூரிக்கு இந்த வார முற்பகுதியில் சென்றபோது அங்கு பல்கலைக்கழக புகுமுக வகுப்பைச் சேர்ந்த 52 மாணவர்கள் இரத்ததானம் செய்தார்கள்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜிதா (ஹட்டன்)
மொடேர்ன் (பண்டாரவளை) தீவொளி (நுவரெலியா) லக்ஷ்மி (இரத்தினபுரி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2 காட்சிகள்; சனி, ஞாயிறு 4காட்சிகள்

சிவாஜி கணேசன், சாவித்திரி
எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஆர். விஜயா
நடிக்கும்



கைகொடுத்த தெய்வம்


வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத
திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு?
இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

தனாதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கொழும்பு

**வெள்ளி 24-9-65**

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள். 7-30 தோத்திரப்பாடல்கள், 8-00 தேர்ந்தஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதசுரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானாஞ்சலி, 7-15 கதாப்பிரசங்கம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 நேயர்விருப்பம் 10-00 புல்லாங்குழல் & கிளாரினெட், 10-15 தேர்ந்த இசை.

## படுமோசமான . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றில் ஒன்றேனும் இடம் பெறவில்லை என்று சௌக்கிய அதிகாரி நமது நிருபரிடம் தெரிவித்தார்.

கதிர்காமத்தில் பொது ஜனங்களின் உபயோகத்திற்காக வேண்டிய மலசல கூடங்கள் இல்லாமையும் இங்குள்ள வியாபார நிலையங்களின் பின்புறங்களிலும் தெருக்களின் பக்கங்களில் நெடுநாட்களாக தேங்கிக் கிடக்கும் குப்பை, கூழங்களும், முறையான வடிகால்களும் இல்லாமையே இங்கு பெருவாரியாக உண்டாகும் ஈக்களும், நுளம்புகளும் முக்கிய காரணங்களாகத் தெரியவருகிறது.

கோயிற் சுற்றுடல் புனிதமாக இருக்க வேண்டும். ஆனால் இங்கோ கங்கையில் நீராடச் செல்லும் பாதையில் வீசும் துர்நாற்றமும், கண்ணால் கண்டு சகிக்க முடியாத அழுக்குகளும் கதிர்காமத்தில் சுகாதாரத்தின் மோசமான நிலையை எடுத்துக்காட்டுகிறது.

## பழைய மாணவர் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி மாணவர்களுக்கும், பழைய மாணவர்களுக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பழைய மாணவர்கள் 3—2 கோல்களால் வெற்றி பெற்றனர். இப்போட்டிக்கு திரு. ஞானரட்டினம் மத்தியஸ்தம் வகித்தார்.

## சரஸ்வதி பூசை

கொஸ்லாந்தை, வியா.

கொஸ்லாந்தை பாரதி கல்லூரியில் ஆகஸ்ட் மாதம் 2-ம், 3-ம், 4-ம் திகதிகளில் சரஸ்வதி பூசை கொண்டாட ஏற்பாடாகியுள்ளது.

இவ்விழாவில் கீழ்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு தேவாரப் போட்டி, சமயப் பேச்சுப் போட்டி, சமய நாடகப் போட்டி ஆகியனவும் நடைபெற இருப்பதாகவும் மேற்படி கல்லூரி அதிபர் திரு. எஸ். ஜெகநாதன் தெரிவித்துள்ளார்.

## ''தமிழ் மகாவித்தியாலயங்கள் எல்லாஇடங்களிலும் அமைக்கப்படவேண்டும்'

### பாடசாலை திறப்பு விழாவில் அஸீஸ் பேச்சு

கொஸ்லாந்தை, வியா.

''கடந்த சில வருடங்களாக தமிழ் குழந்தைகளுக்கு கல்விமுறையில் அநீதி இழைக்கப்பட்டுவந்தது. அது விரைவில் நீங்ககூடிய அறிகுறிகள் தென்பட்டுவருகின்றன. அதற்கு உதாரணமாக ஊவா மாகாணத்திலேயே முதன்முறையாக சிங்களபள்ளியிலிருந்து பிரிந்து தனித்து தனது முயற்சியில் இன்று முதன் முதலாக இயங்கும். இப்பாடசாலையே இதற்குச் சான்று கூறுகிறது.''

பசரையில் பதுளை-மட்டக்களப்பு பாதையில் அமைந்துள்ள புதிய தமிழ் அரசினர் மகாவித்தியாலய திறப்புவிழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிய ஜனநாயகதொழிலாளர் காங்கிரஸின் தலைவர் திரு. அஸீஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''இனி நமது குழந்தைகளும் சிங்கள குழந்தைகள் போல் எல்லாவிதத்திலும் சகல வசதிகள் பெற்று கல்வியறிவு பெறவேண்டுமானால் எல்லா இடங்களிலும் தமிழ்மகாவித்தியாலயங்கள் அமைக்கப்படவேண்டும். இப்படி அமைந்தால் தான் இன்னும் அதிக குழந்தைகள் சேர்ந்து படிக்க வாய்ப்புண்டாகும்.''

பாடசாலையை சைவசமய ஆசாரப்படி திறந்துவைத்த உதவி வர்த்தக அமைச்சரும், பசரை பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ஏ. எஸ். பீரிஸ் பேசுகையில் கூறியதாவது:

''இப் பாடசாலை இவ்வளவு சிறப்பாக அமைந்ததற்கு பெற்றோர்களே காரணம். அவர்களே இதற்கான செலவை மூன்றில் இரண்டு பங்கு கொடுத்திருக்கின்றனர். இவர்களுக்கு நன்றி கூறுவதோடு என்னாலான எல்லா உதவிகளையும் நான் செய்யக் காத்திருக்கிறேன்,''

கூட்டத்தில் பெற்றோர்—ஆசிரியர் சங்கத் தலைவர், தொழிற்சங்க மாவட்டத் தலைவர்களும், பல மலைநாட்டு பாராளுமன்றப் பிரதிநிதிகளும் உரையாற்றினர்.

## சைவப் பெரியாரின் அஸ்தி நாளை யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், வெள்ளி

காலஞ்சென்ற சைவப் பெரியார் சேர் கந்தையா வைத்தியநாதனின் அஸ்தி திருக்கேதீச்சரத்திலிருந்து மோட்டார் ரதம் மூலம் இங்கு கொண்டுவரப்பட இருக்கிறது. நாளை மாலை 4-30 மணியளவில் யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் சிவமணியின் அஸ்தி அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அடுத்த நாள் காலை மாநகரசபை மண்டபத்திலிருந்து அஸ்தி ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு கீரிமலைத் தீர்த்தத்தில் சேர்க்கப்படும்,

சனிக்கிழமை காலை ஏழு மணிக்கு அஸ்தி திருக்கேதீச்சரத்திலிருந்து புறப்பட்டு வவுனியாவுக்கு காலை 9-30 மணிக்கும், கிளிநொச்சிக்கு மத்தியானம் 12-00 மணிக்கும், பளை, கொடிகாமம், மீசாலை, சாவகச்சேரி, கைதடிச் சந்தி, யாழ்ப்பாணம் வாடி வீட்டுச் சந்தி ஆதியனவற்றிற்கு முறையே பி. ப. 1-30, 2-30, 3-00, 3-30, 4-00, 4-30 மணிகளுக்கு வந்தடையும். மாலை 5-00 மணிக்கு யாழ். மாநகரசபைத் தலைவர் அஸ்தியை வரவேற்பார். 5-00 மணிக்கும் ஒன்பது மணிக்குமிடையில் மாநகரசபை மண்டபத்தில் அஸ்தி மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 மணிக்கு அஸ்தி மாநகரசபை மண்டபத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, வண்ணை வைத்தீஸ்வரன் கோவில், கொக்குவில் இந்துக்கல்லூரி, கோண்டாவில் சந்தி, இணுவில், இராமநாதன் மகளிர் கல்லூரி, சுன்னாகம் சந்தி ஆகிய இடங்களுக்குக் காலை 10-00 மணிக்குள் அஸ்தி கொண்டு செல்லப்படும். மல்லாகம் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழைச் சந்தி, மாவிட்டபுரம் சந்தி, வழியாக அஸ்தி கொண்டு செல்லப்பட்டு, மத்தியானம் 12 மணிக்கு கீரிமலையை அஸ்தி சென்றடையும்.

## காய்கறிகள் விலை குறைகிறது

பம்பலப்பிட்டி, வியா.

சென்ற சிலவாரங்களாக காய்கறிகளின் விலை குறைந்து வருவதாக கணிக்கப்பட்டுள்ளது.

முட்டை விலையும் குறைந்துள்ளதாகவும் சந்தைப்பகுதியினரால் 27 சதத்துக்கும் 28 சதத்துக்கும் விற்பனை செய்யப்பட்டுவந்த முட்டை தற்போது 25 சதத்துக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கசிப்பை எப்படி போக்குவது

### காரியாதிகாரி கந்தோரில் மகாநாடு

கிளிநொச்சி, வியாழன்

கிளிநொச்சிப் பகுதியில் இருந்து கசிப்பை ஒழிப்பது சம்பந்தமாக கரைச்சி காரியாதிகாரியின் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் இப்பகுதியில் சாராயத் தவறணை ஒன்று ஆரம்பிக்கச் சிபார்சு செய்யப்பட்டது. இதனால் கசிப்பு குடிப்போர் தொகை குறையும் என்றும் இதன் உற்பத்தியும் குறையும் என்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் மூலம், பளையிலிருந்துவரும் சாராய வியாபாரத் தொழிலும் குறையும் என்றும் கருதப்பட்டது.

இதைவிட கிளிநொச்சியில் அதிகரித்துவரும் ''விளையாட்டுக் கழகங்க''ளும் குறைந்துவிடும் என கருதப்பட்டது. ''விளையாட்டுக் கழக''ங்கள் மறைமுகமான குடிவகை நிலையங்களாக கிளிநொச்சியில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. இவ்விஷயமாக திரு. மு. யோகலிங்கம் விளையாட்டுக்கழகங்களை ஒழிக்கவேண்டும் என்று எடுத்துரைத்தார்.

## செபமாலை மாதாவின் திருநாள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை அர்ச் செபமாலை மாதா ஆலயத்தின் திருநாள் வருகிற சனிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது. வண பிதா சந்தியாப்பிள்ளையவர்களால் இத்திருநாள் வைபவங்கள் நடத்தப்படும்.

## வரி விளம்பரம்

### தேவை

பருத்தித்துறை, வடமராட்சி கூட்டுறவுப் பாற்பண்ணை சங்கத்திற்கு மனேஜர் தேவை. தராதரம் ஆங்கில எஸ். எஸ். சி. (சுணிதம் உட்பட) கூட்டுறவுப் பயிற்சி உடையவர் விரும்பத்தக்கது. வயது 25-35-க்குள். பிணைப்பணம் ரொக்கமாக ரூபா 1000/- உறுதியாக ரூபா 2000/- சம்பளம் 125 × (60 × 12) 225 (சகல ப்டி உட்பட) 7-10-65க்கு முன்நற்சாட்சிப் பத்திரங்களுடன் பதிவுத் தபால் மூலம் தலைவருக்கு விண்ணப்பிக்கவும். 1062

தையிட்டி பலநோ. கூ. சங்கம், காங்கேசன்துறைக்கு மனேச்சர் தேவை. தராதரம் J. S. C. கூட்டுறவுப் பயிற்சி பெற்றவராய் இருத்தல் வேண்டும். வயது 25-க்கு மேற்பட்டவர். பிணை ரொக்கம் ரூ.1000, ஆதனம் ரூ. 2000. சம்பள விகிதம் மாதம் ரூ. 90/- எல்லாப் படிகளும் உட்பட 6 மாதத்தின்பின் கூட்டப்படும். விண்ணப்பம் முடிவு திகதி 28-9-65-க்குப் பிந்தாமல் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். நற்சாட்சிப் பத்திரங்கள் இரண்டு இணைத்தல்வேண்டும். இ. வல்விபுரம், காரியதரிசி. 1064

### விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில்- சிறந்த அயலில், சகல வசதிகளுடன் எட்டுப்பரப்புக்காணி விற்பனைக்கு இருக்கிறது. ஒரு பரப்பின் விலை-ஐயாயிரம். பாகுபாடின்றி எவரும் வாங்கலாம். அரைவாசியும் கிடைக்கும். மனுச்செய்க:- விளம்பர இல. 1052, ஈழநாடு மேர்ப்பார்த்து, யாழ்ப்பாணம். 1052

எம்மிடம் பலரக முந்திரிகைச் செடிகள் விற்பனைக்குண்டு. செமிலோன் சிகப்பு, இசைப்பிலா வெள்ளை, அவுஸ்திரேலியன் விருட்டி ஆகிய ரகங்கள் உண்டு. சி. சபாரெத்தினம், 20, சர்பத்கடை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1048

3 சிறி 6000 தொடர் வரிசையிலுள்ள றயம்ப் ரைகிறஸ் ஸ்பீட்ருவின் (Triump Tigeress Speedtwin) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: எஸ். குமார், உடுவில் ரேட், மானிப்பாய். 1059

புதிய மின்சார வெல்டிங் ரான்ஸ்போமர் (Welding Transformer) விற்பனைக்குண்டு. நேரில் விண்ணப்பிக்கம்ம். விளம்பரதாரர்: வை. எம். சி. ஏ. சுண்டிக்குளி. 1063

## நான்கு லட்சம் ரூபாய்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிய நிலைமை வங்கிக்கு ஏற்பட்டுள்ளதென்பதை கண்டுபிடித்தனர்.

திருமலை மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூட்டுறவு வங்கி கடன் வழங்கிய முறைகள் குறித்து திடீர் சரிசோதனைக்குழுவினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

## ''பாரதியின் அந்தஸ்தை பெறவில்லை''

உடுப்பிட்டி, வியா.

''பாரதியின் காலத்திற்குப் பிறகு பல நூற்றுக்கணக்கான கவிஞர்கள் தோன்றியிருந்தாலும் அவர்கள் எவருமேபாரதி பெற்றுவிட்ட அந்தஸ்தைப் பெறவில்லை. காரணம் பாரதி பாடிய காலம் அவனது கவிதைகளில் உணர்ச்சித் தூண்டுதல்களுக்கு உத்வேகமளித்தது. அன்று பாரத நாடு விடுதலைக்காகத் துடித்துக்கொண்டிருந்தது. அப்போதுதான் வீரசுதந்திரத்தைப்பற்றியும் வீரர்களின் வரலாறுகளைப் பற்றியும் பாரதி இனிய-எளிய தமிழ் மொழியில் பாடினான். அன்று மக்களுக்கு அவனது பாடல்கள் மிகவும் அத்தியாவசியமாக இருந்தன. விடுதலை வேட்கையும் சுதந்திர தாகமும் பலர் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்ததற்குப் பாரதியின் பாடல்கள் காரணமாகவிருந்தன.''

இவ்வாறு திரு. சி. கமலநாதன் கொக்குவில்கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் உயர்தரஇலக்கிய மன்றம் நடாத்திய பாரதி விழாவில் பேசுகையில் கூறினார்.

திரு. க. மகேந்திரா தலைமையில் விழா நடைபெற்றது.

''பாரதி கண்ட தமிழ்'' என்பது பற்றி திரு.ந. கந்தசாமியும், திருவாளர்கள் த. சுந்தரலிங்கம், க. கிருஷ்ணசாமி ஆகியோரும் பேசினர்.

## வாசிகசாலை திறப்பு விழா

உடுப்பிட்டி, வியா.

வல்வெட்டி வளர்மதி வாசிகசாலைத் திறப்புவிழா இளைப்பாறிய வைத்தியர் திரு. மு. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

தலைவர்கட்டடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில், படிப்பகங்கள் இல்லாத ஊரில் பண்பும் பாழாகி விடுமென்றார். ஆசிரியர் திரு ந. சுப்பிரமணியமும் பேசினார். படிப்பகத்தின் நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. இ. சித்திவிநாயகம், உப-தலைவர்: திரு. வே. நடனசிகாமணி செயலாளர், திரு. சி. நவரத்தினம், பொருளாளர்: சி. மகேசன், புத்தகப் பொறுப்பாளர்: பண்டிதர் இ. பரமகுரு, போஷகர்: திரு. கிருஷ்ணசாமி.

## அரபுக்குடியரசின் ஒத்துழைப்பு

பெர்லின், செப். 23

''ஜெர்மன்—அரபு நட்பு மலர் இன்று பூரணமாக மலர்ந்துள்ளது'' என்று ஐக்கியஅரபுக் குடியரசின் உபஜனாதிபதி ஹசன் இப்ராகீம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவர் தனது மனைவியுடன் ஜெர்மன்ஜனநாயகக் குடியரசுக்கு விஜயம்செய்து பத்து தினங்கள் தங்கியிருந்தார். பொருளாதாரம், கலாச்சாரம், கொள்கை ஆகிய பிரச்னைகளில் இரு நாடுகளிடையே நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்பட்டிருப்பதாகவும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் அனுபவங்கள்தங்கள்நாட்டின் அபிவிருத்திக்குப்பயன்படும்என்றும் அவர் தமது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஸ்திரி, அயூப் விடுத்த எச்சரிக்கை!

புதுடில்லி, செப். 22

''இந்த இறுதி நேரத்திலும்கூட இந்தியாவுடனான பிரச்னையை சீனா பெரிதுபடுத்திக்கொள்ளாது என்றே நம்புகிறேன். ஆனால் சீனா நம்மீது படையெடுப்பின் நாம் மௌனமாயிருக்கமாட்டோம். நம்மீது படை எடுத்தால் அதற்கு தக்க பதிலடி கொடுக்க சிறிதும் தயங்கமாட்டோம்'' என இன்று சீனப் பயமுறுத்தல் பற்றிக் குறிப்பிடுகையில் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி எச்சரித்தார்.

''சீனத்துருப்புக்கள் இந்தியத் துருப்புகள் மீது சுட்டால் திருப்பிச் சுடுமாறு முப்படைகளுக்கும் உத்தரவு விடப்பட்டுள்ளது. எல்லைப் பகுதியில் மிகவும் கண்காணிப்புடன் இருக்கவேண்டும் என்றும் உத்தரவு விடப்பட்டுள்ளது. எங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள இப்பெரிய சவாலை சமாளிக்க வேண்டிய பெரும் பொறுப்பு எங்களைச் சார்ந்துள்ளது': எனவும் திரு. சாஸ்திரி குறிப்பிட்டார்.

ஃ ஃ ஃ

ஐ. நா.வின் சண்டை நிறுத்த உத்தரவை பாகிஸ்தான் ஏற்றுக்கொண்டது சம்பந்தமாக இன்று மாலை வானொலியில் உரை நிகழ்த்திய அதிபர் அயூப்கான் காஷ்மீர் பிரச்னையில் புதிய கட்டத்தில் பிரவேசித்திருப்பதாகவும் மிக விரைவில் நிரந்தர தீர்வு காணப்படாவிடில் உபகண்டத்தில் இப்பொழுது நடந்ததைவிட இன்னும் பிரமாண்டமான பெரும் போர் ஒன்று நடைபெற ஏதுவாகிவிடும் என்றும் எச்சரித்தார்.

ஐ. நா.வின் தற்போதைய தீர்வு போதுமானதல்ல, திருப்தியானதல்ல எனத் தெரிவித்த அதிபர் நிரந்தர தீர்வு ஒன்றைக் காண ஐ. நா.வின் அங்க நாடுகள் தமக்குச் சில உறுதிகள் தந்திருப்பதாயும் தெரிவித்தார். சண்டை நிறுத்த உத்தரவு படைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதெனவும் அதிபர் தமது வானொலி உரையில் தெரிவித்தார்.

# சகல மக்களும் சமத்துவமாக வாழவேண்டும்

## சாதி ஒழிப்புபற்றிய அமைச்சர்களின் செய்தி

பம்பலப்பிட்டி, புதன்

''இந்நாட்டிலே சாதிவேற்றுமை ஒழிக்கப்பட்டு சகல மக்களும் சமத்துவமாக வாழவேண்டும்'' என்று வடமாகாணத்தில் கொண்டாடப்படும் தீண்டாமை ஒழிப்பு வாரத்தையொட்டி உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யு. தஹநாயக்கா வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது;-

''நமது மத்தியில் தாண்டவமாடிக்கொண்டிருக்கும் சாதிப்பிரச்னை நமது பாரம்பரியப் பண்பாட்டுக்கும் நெறிக்கும் இழுக்குத்தேடக் கூடியதாகவிருக்கிறது. இந்நாட்டிலுள்ள சகல மக்களும் மனித உரிமைகள் அத்தனைகளுடனும் சமத்துவமாக வாழ்வதற்கு தேசிய அரசாங்கம் வழிவகுக்கும். தேசிய அரசாங்கம் சாதிவேற்றுமை காட்டுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடிய சட்டத்தையும் விரைவில் இயற்றும் என்பதையும் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்''

## கடைசி நேரத்தில் குண்டு வீச்சு!

புதுடில்லி, செப். 22

இன்று மாலை பாகிஸ்தான் வானொலியில் அதிபர் அயூப்கான் தமது படைகளுக்கு சண்டை நிறுத்த உத்தரவை அனுப்பியிருப்பதாகத் தெரிவித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் பாகிஸ்தான் விமானப்படையினர் அமிர்தசரஸில் குண்டு வீசினர். இதன் விளைவாக 45 பேர்கள் கொல்லப்பட்டனர் என்றும் 50 பேர்கள் படுகாயமடைந்தார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கசூர் அரங்கில் கடும் சண்டை நடைபெறுவதாக செய்திகள் கிடைத்துள்ளன.

சண்டை நிறுத்த உத்தரவு இந்தியப் படைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## பட்டினசபையின் தீர்மானங்கள்

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை பட்டினசபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் தலைவர் திரு. கே. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பட்டினசபையின் நகரசுத்தித் தொழிலாளரை சேமலாபநிதித் திட்டத்தில் சேர்ப்பதெனவும் அதற்காக அவர்கள் சம்பளத்தில் சிறு தொகையைக் கழிப்பதெனவும் பட்டினசபையும் 7 சத வீதம் கொடுப்பதென்றும் இறைச்சி நிலையம் அமைப்பதற்கு கசாப்பு நிலையத்தை விரைவில் தேர்ந்தெடுத்துக் கட்டுமாறு விண்ணப்பத்தாரரைக் கேட்டுக்கொள்வதென்றும் வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், வியா.

ஆசைநாயகனின் மனைவியைப் பாளைக்கத்தியினால் பல தடவை வெட்டிப் படுகாயம் விளைவித்ததாகச் சந்தேகிக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஆவரங்காலைச் சேர்ந்த சிவபாக்கியம் என்ற இளம் பெண்ணை ரூபா 200 பிணையில் செல்ல யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. ரி. ஜே. இராசரத்தினம் அனுமதி கொடுத்தார்.

சென்ற 11-9-65 இரவு நித்திரையாயிருந்த ஆவரங்காலைச் சேர்ந்த வாரியின் பெண் மீனாட்சியை கத்தியினால் வெட்டிப் பல காயங்களை விளைவித்தாரெனச் சந்தேகத்தின் பேரில் கோப்பாய் பொலிசாரால் சிவபாக்கியம் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட்டினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

கூ. மொ. வி.

## விற்பனை நிலையத்தை மூடாதீர்!

### நகரசபை தீர்மானம்

பருத்தித்துறை, புதன்

பருத்தித் துறையிலிருக்கும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையக் கிளையை மூடிவிடும் எண்ணத்தைக் கைவிடும்படி கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின் தலைவரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று பருத்தித்துறை நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

மற்றும் பருத்தித்துறையில் ஒரு மீன்பிடி துறைமுகத்தையும், பருத்தித்துறை மீனவர்கள் மீன்பிடியைப் பற்றிய அறிவைப் பெறும் பொருட்டு மீன்பிடிப் பயிற்சி நிலையத்தையும் உருவாக்கும்படி கைத்தொழில் மீன்பிடி அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டதுடன் நகரசபை மக்களுக்கு நல்ல குடிநீர் வழங்கும் பொருட்டு குழாய் நீர் வசதிக்காக உள்ளூராட்சி மன்ற ஆணையாளரிடம் ரூபா 4 லட்சம் கடனுதவி கோரும் பிறிதோர் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன,

கடைசி இரு தீர்மானத்தின் பிரதிகளை உள்ளூராட்சி மன்ற அமைச்சருக்கும் உடுப்பிட்டி, பருத்தித்துறை எம். பி.க்களுக்கும் அனுப்பிவைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## சீசன் டிக்கட் வழங்குமாறு கோரிக்கை

உடுப்பிட்டி, புதன்

பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பது போன்று இ. போ. ச. பஸ்களில் கல்லூரிகளுக்குப் பிரயாணம் செய்வதற்கு இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கும் அரைகட்டண சீசன் டிக்கட் சலுகை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையுடன் வடமராட்சி பஸ் பிரயாணிகள் சங்கத்தின் சார்பிலும், ஜோக்குவில் கனிஷ்ட தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள் சார்பிலும் தூதுகோஷ்டியொன்று கொழும்பு நாரம்பிட்டியாவிலுள்ள இ. போ. ச. அதிபர் திரு. நித்தியபாலாவை நேரில் கண்டு மகஜர் சமர்ப்பித்தனர். மகஜரைப் பரிசீலனை செய்த அதிபர் தாம் தக்க நடவடிக்கை எடுப்பதாக வாக்களித்துள்ளார்.


## விளம்பரம்

### உடுவில் கிராமசபை

1965-ம் ஆண்டு புரட்டாதி மாசம் 28-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரையும் கீழ்க் காணும் வேலைகளுக்கு ரெண்டர்கள் அழைக்கப்படும். ரெண்டர் பத்திரங்கள் ரூபா 25/- கட்டி புரட்டாதி மாசம் 27-ந் திகதி பகல் 12 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய விபரங்கள் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

**வேலைகள்**

1. மருதனார்மடம் சந்தைக் கட்டிடம்.
2. குஞ்சுவடலிக் காணியில் கிணறு வெட்டுதல்.

ச. முத்துலிங்கம்
தலைவர்

உடுவில் கி. ச. காரியாலயம், [illegible]
22-9-65 872


''ஐ. தே. கட்சியுடன்

# தற்காலிகமுடிவுடன்தான் தமிழரசுக்கட்சி சேர்ந்துள்ளது''

## நெல்லியடியில் ஊர்காவற்றுறை எம். பி. பேச்சு

உடுப்பிட்டி, புதன்

''தற்காலிக முடிவுடனேயே தமிழரசுக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இப்போது சேர்ந்திருக்கிறது. இதன் விளைவு எம்மாதிரியிருக்குமென்று என்னால் சொல்லமுடியாது. மாவட்ட சபைகளை அமைக்கவும் நீதிமன்றங்களில் தமிழ்மொழி உபயோகத்தைக்கொண்டு வரவும் நியாயமான உரிமை வழங்கவும் வழிவகை செய்வோம் என்ற ஐ. தே. கட்சியின் உறுதியின் பேரிலேயே அவர்களுடன் தற்காலிகமாகச் சேர்ந்துள்ளோம்''

ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம் நெல்லியடி தமிழரசு வாலிப முன்னணியினர் நடாத்திய சாதி ஒழிப்புப் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அட்வக்கேட் திரு. கே, ஜெயக்கொடி தலைமையில் நெல்லியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. நவரத்தினம் எம். பி. தொடர்ந்து கூறியதாவது:-

அரசாங்க ஊழியர்கள் விஷயத்தில் அரசாங்கம் நம்மைக் கைவிட்டபோதிலும் நாம் மிகப் பெரிய பயன்களை திர்பார்த்திருப்பதால் இப்போது பொறுமையாக இருக்கவேண்டியவர்களாகவிருக்கிறோம். இன்னும் இரண்டு மாதங்களில் மொழிப் பிரச்னைக்குத் தீர்வுகாணப்படும். தேசிய அரசாங்கத்துடன் இணைந்துவிட்டதால் சகல பிரச்னைகளும் தீர்ந்துவிட்டது என்று எண்ணித் தமிழ் மக்கள் சும்மாயிருக்க முடியாது.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில், அடுத்த மாதத்தில்மாவட்டசபை மசோதா பாராளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறதென்றும் மாவட்ட சபைகள் தமிழிலேயே இயங்குமென்றும் மற்றும் வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏழு மாகாணங்களிலும் உள்ள தமிழர்கள் அரசாங்கத்துடன் தமிழிலேயே தொடர்புகொள்ளலாமென்றும் சொன்னார்.

''சாதிப்பிரச்னை தமிழினத்திற்கோர்சாயக்கேடு. சாதிப்பிரச்னை ஒழிந்தாற்றான் தமிழினம் முன்னேற முடியும். இது உள்ளவரை பிரச்னைகள் இருந்தேதீரும். மனிதனை மனிதன் தாழ்த்துவது அநீதியானது மனநீதிக்கு மதிப்புக்கொடுக்கவேண்டும் என்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினார்,

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திருவாளர்கள் ஈழகாந்தன், மெய்யரசன் க. திருநாவுக்கரசு. அட்வக்கேட் ஆலாலசுந்தரம் ஆகியோரும் பேசினர்.

திரு. செ. சுவர்ணராசா நன்றியுரை கூறினார்.

# கிணற்றில் விழுந்த குழந்தையை காப்பாற்ற முயன்ற தாயும் மரணம்

வவனியா, புதன்

கிணற்றில் தற்செயலாகத் தவறிவிழுந்த குழந்தையைக் காப்பாற்றக் குதித்த தாயும் மரணமான பரிதாப சம்பவம் வவனியாவிலுள்ள பாவற்குளத்தில் நிகழ்ந்துள்ளது.

செல்வன் என்ற ஒன்றரை வயதுக் குழந்தை தவறி கிணற்றில் விழுந்ததைத் தொடர்ந்து அக்குழந்தையின் தாயான வள்ளியம்மையும், குழந்தையைக் காப்பாற்றுவதற்காக கிணற்றில் குதித்து மரணமானார் என்ற விபரம் மரணவிசாரணையின் போது தெரிய வந்தது.

அயலவர்கள் குழந்தையையும், தாயையும் காப்பாற்ற எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. த. சின்னையா மூச்சுவிடமுடியாததால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## தும்புத் தொழிற்சாலை

பருத்தித்துறை, புதன்

நாகர் கோவிலில் புதிய தும்புத் தொழிற்சாலையொன்றை இப்பகுதிக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. கே. என். நவரத்தினராசா சம்பிரதாயப்படி குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் தும்புக் கட்டை செய்யும் வேலையில் பயிற்சிபெற 32 பிள்ளைகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அரசினரால் ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதுடன் தும்புத் தொழிலின் விருத்திக்கான இயந்திரங்களும் விரைவில் கிடைக்கும் எனவும் தெரியவருகிறது.

## பஸ் ஊழியருக்கு 'போனஸ்' கிடைக்கும்

பம்பலப்பிட்டி, வியா.

இ. போ. ச. ஊழியர் ஒவ்வொருவருக்கும் இந்த வருடத்துக்கு 175 ரூபாவை போனஸாக வழங்கவும் சம்பளமற்ற லீவு பெறாத ஊழியருக்கு இந்த வருடத்துக்கு தலா ரூபா 25 சன்மானமாக வழங்கவும் இ. போ. சபை தீர்மானித்துள்ளது.

## இந்து மாமன்றத் தலைவராக ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவராக நீதியரசர் திரு பி ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார். வழக்கறிஞர் திரு. எஸ். சோமசுந்தரம் திருக்கேதீச்வரர் திருப்பணிச்சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்,

## ஜெர்மனியை ஒன்றுபடுத்த யோசனைகள்

பேர்லின், செப். 23

ஜெர்மனியை ஐக்கியப்படுத்துவதற்காக 1954-ல் ஜெர்மன் ஜனநாயகக்குடியரசில் நிறுவப்பட்ட குழு அண்மையில் பேர்லினில் கூடி சில யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளது. மேற்கு ஜெர்மனியும், கிழக்கு ஜெர்மனியும் பல துறைகளில் ஒத்துழைப்பதற்காக ஒரு கூட்டுக்கமிஷன் நிறுவவேண்டுமென்றும், அணு ஆயுதங்களைப் பெற இரு ஜெர்மன் ராஜ்யங்களும் முயற்சிசெய்யக் கூடாதென்றும் இரு ராஜ்யங்களையும் இணைப்பதற்காக முதற்படியாக இரு ராஜ்யங்களையும்கொண்ட ஒரு சமஷ்டி ஆட்சியை நிறுவவேண்டுமென்றும் இந்த ஐக்கிய குழு யோசனை கூறியுள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org